பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

லாலாசோப்
சன்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
நிக்ஷன்
பல்பொருள் வாணிபம்
பிரதான வீதி, அச்சுவேலி.
உரிமையாளர்;
செல்வரட்ணம்(ஆமி)
லாலாசோப் அச்சுவேலி
1985

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 29 செவ்வாய்க்கிழமை (14-11-2000) தொ. பேசி 3378 ஒலி: 330

## அடுத்தகட்ட பேச்சிற்கு இலங்கைவரும்போது
# நோர்வேயின் தூதுவர்எரிக்சோலை
# கைதுசெய் துசிறையிலடைக்கவும்!

## சிஹல உறுமய வேண்டுகோள்

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடனும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுடனும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும்நோர்வேயின்விசேட தூதுவர் எரிக் சோல் ஹைம் அடுத்கட்ட பேச்சு வார்த்தைக்காக வரும் போது அவரை உடனடியாக கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும்**

சிஹல உறுமயக்கட்சி செயலாளரும், கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியுமான திலக்சருணரெத்தின இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம் வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

சிஹல உறுமய கட்சியின் செயலாளர் திலக்கருணாரத்தின நோர்வேயின் பேச்சு வார்த்தைக்கெதிராக நேற்றுப்பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

இந்தப் பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

(8 ஆம்பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தை தமிழ் எம். பிக்கள்
# எதிர்த்து வாக்களிக்க முடியாது
# ஆனால் பேசுவதற்கு சுதந்திரமுண்டு
### விநாயகமூர்த்தியிடம் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் அவசரகாலச்சட்ட விவாதத்தின் மீது கலந்துகொண்ட எந்த ஒரு ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியும் பேசுவதற்கு சுதந்திரம் உண்டு. ஆனால் அதை எதிர்த்து வாக்களிக்க முடியாது. வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் இருப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடாகும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, பொதுச்செயலாளர் கலாநிதி ந. குமரகுருபரன் ஆகியோர் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவைச் சந்தித்து அவசரகாலச் சட்டத்திற்கு எதிராகத் தமிழ் எம். பிக்கள் வாக்களிக்க அனுமதி அளிக்குமாறு கேட்டுக் கொண்ட போதே ரணில்

(8ஆம் பக்கம் பாக்க)

## இம்மாத நிவாரணத்தை
## உடன்வழங்கநடவடிக்கை

## யாழ்.பொறியியல் பீட மாணவன் எங்கே?
### மர்மம் தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பில் விடுதியொன்றில் தங்கியிருந்த வேளை கடந்த மாதம 27 ஆம் திகதி முதல் காணாமல் போன பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட இறுதி ஆண்டு மாணவன் நடராஜா மனோரஞ்சன் (வயது 27) என்பவரது விபரம் எதுவும் இதுவரை வெளியாகவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

யாழ்ப்பாணம் இந்துமகளிர் வீதியைச் சொந்த இடமாகக் கொண்ட மேற்படி பிரஸ்தாபநபர் காணாமல் போனது தொடர்பாகபொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-2)

## நோர்வேயின்முயற்சி பாராட்டப்பட வேண்டும்
### டி.எம் ஜெயரத்தினா

(கொழும்பு)

இனப்பிரச்சினை தீர்வுசம்பந்தமாக நோர்வேயின் விசேட தூதுவர்மேற்கொண்டுவரும் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக அதிகம் எனக்கு தெரியாதபோதும் அந்த சமாதான முயற்சிநிபந்தனையின்றி நடைபெற்றால் அது

(8ம் பக்கம் பார்க்க)

## எறிகணைத் தாக்குதல்

பூநகரி, கல்முனைப்பகுதிகளை நோக்கி நேற்றுப் பிற்பகல் 5.00 மணியில் இருந்து தொடர்ச்சியாக பலத்த எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த எறிகணைத் தாக்குதல்கள் பெரும்பாலும் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் இருந்து மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

இதே வேளை நேற்றுப் பிற்பகல் வேவு விமானம் ஒன்று யாழ். குடாநாட்டுப் பகுதியை பலதடவைகள் வலம் வந்ததும் குறிப்பிடத்தக்கது

## யாழ் பல்கலைக் கழகத்தில்

## உடன் வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம)

யாழ் மாவட்டத்தில் இது வரை வழங்கப்படாமல் இருந்த இம்மாதத்திற்கான நிவாரணப் பொருட்கள் இன்று முதல் வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம்

[ 8 ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் தாக்குதலில் படைத்தரப்பில் ஒருவர் பலி

செட்டிகுளம் பிரிவில், முதலியார் குளம் கரம்பை மடு வீதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஒருவர் பலியானதாகவும் மற்றொருவர் படுகாயமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இத்தாக்குதலின் பின் அப்பகுதியில் கடுமையான தேடுதல் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

### யாழ் பல்கலைக் கழகத்தில்

## சிரேஷ்ட மாணவிகள் "ராக்கிங்" புதுமுகமாணவி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புகுமுக மாணவியொருவர் சிரேஷ்ட மாணவிகளால் கடுமையான முறையில் 'ராக்கிங்' கொடூரத்திற்கு ஆளாகியுள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட பிரஸ்தாபமாணவி தற்போது வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

திருநெல்வேலிப் பகுதியில் தங்கியிருந்து கல்விகற்ற இம் மாணவியை பலவந்தமாக அழைத்துச் சென்ற சிரேஷ்ட மாணவிகள் அவரது கை மற்றும் உடல் பாகங்களைப் பிளேற்றினால் கீறியுள்ளனர்.

இவ் 'ராக்கிங்' கொடூரம் குறித்து யாழ் பல்கலைக்கழக நிர்வாகம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதேவேளை ராக்கிங் சேட்டையில் ஈடுபடுபவர்கள் மீது துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கடும் நடவடிக்கை எடுத்து வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## சமாதானப் பேச்சை முன்னெடுக்க அமெரிக்கா உதவ வேண்டும்

### அமெ-தூதுவரிடம் கூட்டணி கோரிக்கை

(கொழும்பு)

வடக்குக் கிழக்கில் தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும். இதனைச் செயற்படுத்த இலங்கை அரசை அமெரிக்க அரசாங்கம் நிர்ப்பந்திக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தூதுக்குழு அமெரிக்க தூதரக அதிகாரியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்றுக் காலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூத

(8ம் பக்கம் பார்க்க)

### ஈ. பி. ஆர். எல். எவ்வின் யாழ். அலுவலகத்தில்

## வெடிவிபத்து; ஒருவர் பலி

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (வரதர் அணி) யின் யாழ் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற தவறுதலான துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் பலியானார்.

[illegible] சேர்ந்த [illegible]னத்தம்பி நவரெட்ணராஜா (காளி, வயது 44) என்பவரே பலியானவராவார்.

மேற்படி நபர் ஈ பி. ஆர் எல். எவ் அலுவலகத்தில் பணியாற்றுபவர் என்று [illegible] (ந-12)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளதழ

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

# வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும்பதிவுசெய்தல் 2001

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ் பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குனர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் 2000 டிசெம்பர் 15ந் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

### வழங்கல்கள்

01. எழுதுபொருட்கள்
02. புத்தகங்கள் பருவ வெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
03. அலுவலக தளபாடங்கள்.
04. அலுவலக உபகரணங்கள் (ஸ்ரீல் அலுமாரி,கபினட்டுகள் முதலியன)
05. அலுவலக இயந்திரங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், கல்குலேட்டர்கள், பிரதி பண்ணும் இயந்திரங்கள், போட்டோகொப்பிஇயந்திரங்கள் முதலியன).
06. சகல வகையான ஹட்வெயர், பெயின்டுகள் வாணிஸ் உட்பட.
07. இயந்திர கருவிகளும்உதிரிப்பாகங்களும்
08. மின்சார சாதனமும்உதிரிப்பாகங்களும்.
09. வெட்டும் கருவிகளும், மண்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
10. ஜவுளிகள் ஜன்னல் திரைச் சீலைகள், சீருடைத்துணிகள் முதலியன
11. ஆய்வுகூட சாதனங்கள்.
12. இரசாயனப் பொருட்களும் கண்ணாடிப் பொருட்களும்.
13. மரங்கள்-தீராந்தி, பனைமரம், சிலாகைகள்.
14. கட்டிடப் பொருட்கள் (மணல், செங்கல், உலோகம், சுண்ணாம்பு முதலியன)
15. தும்புத்தடி. விளக்குமாறு, கால் துடைப்பங்கள் முதலியன.
16 டயர், ரியூப்புகள் பற்றரிகள்.
17. மோட்டார் உதிரிப் பாகங்கள், துணை உறுப்புகள்.
18. ஆயுள்வேத மருந்துகள்.
19. மருந்துகளும் மருத்துவ வழங்கல்களும்.
20. விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்.
21. தீயணைப்பு சாதனங்களும் பாதுகாப்பு சாதனங்களும்.
22. மழைக்கோட்டுகள், சேற்று சப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.
23. பைப்புகள், பைப்இணைப்புகள்.
24. பிளாஸ்டிக், பைபர், கிளாஸ் உற்பத்திகள்.
25. மட்பாண்டப் பொருட்கள் கண்ணாடிப் பொருட்கள், கண்ணாடிகள்.
26. தோட்ட வேலைகளுக்கான பசளைகள்,இரசாயனங்கள் கருவிகள்.
27. கணனி உட்பட எலக்ரோனிக் பொருட்கள்.
28. கணனி மேசைக் கதிரைகள்.

### சேவைகள்

01. அச்சிடுதல் புளொக் செய்தல், றப்பர் ஸ்டாம்புகள்,திகதி ஸ்டாம்புகள்.
02. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் (தட்டச்சு இயந்திரங்கள், புகைப்பட பிரதி பண்ணும் இயந்திரங்கள்,பக்ஸ்,கொம்பியூட்டர், மின் தட்டச்சியந்திரங்கள்) திருத்த வேலைகள்.
03. குளிர்சாதனப் பெட்டிகள், எயர் கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்.
04. ஸ்ரீல் தளபாட திருத்த வேலைகள்.
05. மரத்தளபாட திருத்தவேலைகள்.
06. கதிரைகள் பின்னுதல்.
07. உடைகள், கதவு யன்னல் திரைச் சீலைகள் தைத்தல்.
08. பெயர்ப் பலகைகள் வரைதலும், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள் செய்தலும்.
09. உடைகளைச் சலவை செய்தல்.
10. புத்தகங்களையும் பருவ வெளியீடுகளையும் பைண்டிங் செய்தல்.
11. மோட்டார் வாகனங்கள் திருத்துதல்.

### எந்திரவியல் சேவைகள்

01: மின்மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
02. குடிசார் எந்திரவியல் வேலைகள் (கட்டிடங்கள் நிர்மாணித்தலும் திருத்த வேலைகளும்)
* இச்சேவைகளுக்கு மட்டும் ICTAD பதிவின் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
03: மின்சார வயரிங் வேலைகள்.
04. நீர் விநியோக வடிகாலமைப்பு வேலைகள் மற்றும் திருத்த வேலைகள்.
05. இரும்பு கிறில்கள்/ கேற்றுக்கள் உருவமைத்தல் பொருத்துதல்.
06. கட்டிடங்கள்/கட்டிட சேவைகள் அவற்றுடன்தொடர்புடைய இயந்திர சாதனங்களுக்கான உசாத்துணை சேவைகள்.
07. நிலையாக பொருத்தப்பட்டமரத் தளபாடங்கள் வழங்கல்/பொருத்துதல்.
08. எந்திரவியல் சார் வரைதலும் நீலப்பிரதி செய்தலும்.
09. கறையான்/பீடைகள் ஒழிப்பு வேலைகள்.
10. அலுமினிய கதவு/சாளரம்/சீலிங்/ பிரிப்புகள் வழங்குதலும் பொருத்துதலும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்கல்கள் சேவைகள் 2001'' எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகலவிண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

1) வழங்கல்களுக்கும் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என முகவரியிடப்படவேண்டும்.

2) எந்திரவியல் சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் வேலைகள் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், த.பெ.இல. 57, யாழ்ப்பாணம் என முகவரியிடப்படவேண்டும்.

ஒவ்வொரு வழங்கல்/சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்துடன் பதிவுக் கட்டணமாக ரூபா 200/- பெறுமதியான யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் எனும் பெயருக்குப் பெறப்பட்ட காசுக்கட்டளை / தபாற் கட்டளையையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். விலை மனுக்கள் பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் வேறிடங்களிலிருந்து விலை மனுக்களைக் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமையுண்டு.

கோரப்படும்போது விலைமனுக்களை சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள் / சேவைகளை வழங்கத்தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குனரின் பெயரும் முன் அறிவித்தலின்றி பதிவுப்புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வரும் தகவல்களைக் கொண்டிருக்க வேண்டும்:

1) விண்ணப்பிக்கும் வழங்கல் / சேவை
2) பெயரும், விலாசமும்
3) தொலைபேசி இலக்கம்
4) வியாபார பதிவின் இலக்கமும்திகதியும்
5) வியாபாரத்தின் தன்மை
6) வங்கியாளர்களின் பெயர்
7) கிடைக்கக்கூடிய கடன் வசதிகள்
8) ICTAD பதிவு இலக்கம், புத்தக இலக்கம் (எந்திரவியல்சேவை 2 இற்கு மட்டும்)

(3ஆம் பக்கம் பார்க்)

## சமாதான நீதிவானாக நியமனம்



(மானிப்பாய்)

மானிப்பாய்முதலாம் குறுக்குத்தெரு இணுவில் வீதியைச் சேர்ந்த லயன். எஸ். ஜே. செல்வராஜா மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதிசுப்பிரமணியம் முந்நிலையில் சமாதான நீதவானாகச் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர்மானிப்பாய்பலநோக்குக்கூட்டுறவுச்சங்க முன்னாள் தலைவரும், தற்போதைய இயக்குநரும், உடுவில் அரச மத்திய மருந்தக அபிவிருத்திச் சபைத் தலைவரும், வடகிழக்கு மானிப்பாய் பாரதி சனசமூக நிலையச் செயலாளரும், மானிப்பாய் திருச்சபை நிர்வாகஆதீனப்பிரதிநிதியும், கல்லூரி அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினரும், மானிப்பாய் மக்கள்குழுஉறுப்பினரும், மானிப்பாய் வை. எம். சி. ஏ. நிர்வாகச்செயலாளரும், சர்வதேச லயன்ஸ் கழகம் மானிப்பாய் வட்டப் பொருளாளரும், தென்னிந்தியத் திருச்சபையாழ். பேராயக் கவுன்சிலரும், ஆனந்தா விளையாட்டுக்கழக ஆலோசகரும், கல்லூரிபழையமாணவர் சங்கச் செயலாளரும், தென்னிந்தியத் திருச்சபையின் மானிப்பாய்கிறீன் வைத்தியசாலை, இணுவில் மக்லிபோட் வைத்தியசாலை முன்னாள் செயலாளருமாவார்.

(க - 120)

★ ★ ★

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த அண்ணாமலைமார்க்கண்டர், கௌரவ நீதி அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சினால் யாழ்ப்பாண நீதி நிர்வாகப் பகுதிக்கான சமாதானநீதவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

(உ - 59)

## இராசி பலன்

14.11.2000
(ஐப்பசி 29 செவ்வாய்)
திருதியை மு.இ.10.50 வரை
மிருகசீரிடம்பி.இ. 2.22வரை
ராகு காலம் 3.07 - 4.37
சுப நேரம் 10·37-12·07
சித்தம்

**மேடம்**
சகோதரர் உதவி, நினைத்த காரியம் கை கூடும், குடும்ப சுகம், பிரயாணம்.

**இடபம்**
வாக்குக் கலகம், காரியத் தாமதம், கௌரவக்குறைவு, பொருள் விரயம்.

**மிதுனம்**
தேக சுகம், கற்பனைமிகுதி, காரிய ஜெயம், போசன சுகம்.

**கடகம்**
பிரயாணம், சுப செலவு, ரோகம், சயன சுகக்குறைவு.

**சிங்கம்**
உறவினர் சந்திப்பு, மன மகிழ்ச்சி, கீர்த்தி, தனலாபம்.

**கன்னி**
அதிகாரம், முயற்சிகள் கை கூடும், தொழில் மேன்மை, பெரியோர் தொடர்பு.

**துலாம்**
பயந்த சுபாவம், பிரயாணம், உடல் உபாதை, உறவினர் வருகை.

**விருச்சிகம்**
உறவினர் வெறுப்பு, பிரயாண பயம், காரியம் தாமதம், நோய்.

**தனுசு**
களஸ்திர சுகம், விருந்துபசாரம் காரிய நன்மை, கௌரவம்.

**மகரம்**
நோய் குணமடைதல், எதிரிகள் விலகுவர், சந்தோசமான சம்பவம், காரிய ஜெயம்.

**கும்பம்**
வியாதி, நிலைமாற்றம் முயற்சி தடங்கல், குடும்பக் கவலை.

**மீனம்**
பயந்த சுபாவம், காரிய அனுகூலம், வியாதி, உறவினர் வெறுப்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## நேரில்விஜயம

அண்மைய யுத்தம் காரணமாக பாரிய சேதத்திற்குள்ளான மந்துவில், இயற்றாலை, வரணி ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகள், கட்டடங்கள் பொது அமைப்புக்கள் ஆகிய இடங்களை யூ. என். எச். சீ. ஆர். உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டுள்ளனர்.

(செ-28)

## பிரிவுத் துயர் பகிர்வு

### திரு. சபாரட்ணம் தர்மரட்ணம்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டியில் வசித்தவரும், தற்பொழுது நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சபாரட்ணம் தர்மரட்ணம்13-11-2000 அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று நவாலி வழுக்கையாறு (ஆரியம்பிட்டி) மயானத்தில் நடைபெறும்.

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி இராசையா சிவயோகம்

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தஇராசையா சிவயோகம் 11. 11. 2000 அன்று லண்டனில் காலமானார். இறுதிக் கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்
செ. சோமசுந்தரம்
(சகோதரன்)

### திருமதி இராசரத்தினம இரத்தினம்

தாவடி வடக்கைச் சேர்ந்த திருமதி இராசரத்தினம் இரத்தினம் நேற்று (13-11-2000) காலமானார். அவரது ஈமைக்கிரியைகள் நேற்றைய தினம் தாவடி இந்துமயானத்தில் நடைபெற்றது.

தகவல்: இரா. திருச்செல்வம், (மகன்)
இரா அருட்செல்வம் (மகன்)

# மாணவர் திறன்களை வளர்க்கும் களங்களாக பாடசாலைகள் திகழ வேண்டியது அவசியம்

## 'வித்தியா'சஞ்சிகை வெளியீட்டு விழாவில் தெரிவிப்பு

[அரியாலை]

பல்வேறு திறன்களை வளர்க்கும் களங்களாகப் பாடசாலைகள் திகழ வேண்டும். அந்த வகையில் ஒரு கல்லூரியின் பன்முகப்பட்ட பரிமாணங்களை எடுத்து இயம்புபவை அங்கிருந்து வெளிவரும் சஞ்சிகைகளே ஆகும். நல்ல ஆரோக்கியமுள்ள எழுத்தறிவுப் பாரம்பரியமுள்ள சந்ததியை உருவாக்க விளையும் இன்றைய மாணவர்களுக்கு சிறந்த பயிற்சிக் களமாக ''வித்தியா'' அமைந்துள்ளது என்று யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் சலாநிதி எஸ்.சிவலிங்கராசா தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரியில், கல்லூரி முதல்வர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்ற ''வித்தியா'' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய போது அவர் மேற்கண்டவாறுதெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ''ஈழத்துக் கல்விப் பாரம்பரியம் மற்றும் கல்வி மரபுகளைப் படித்து ஆராய விரும்புபவர்களுக்கு ''வித்தியா'' புத்தெழுச்சியைத் தருகிறது.

இன்றைய கல்வி மரபு; மரபு வழிப்பரம்பரை, திண்ணைப்பள்ளி முறையில் முளைத்து, மேலத்தேய நவீன கல்வி மரபோடு இணைந்து நிறுவனமயப் பட்டமரபாகி, இரு மரபும் இணைந்த கல்வி மரபாக உதித்தது.

19 ம் நூற்றாண்டின்பிற்பகுதியிலிருந்து ஈழத்தை விட்டு வெளியே சென்ற புலமையாளர்கள் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்ததற்கு இந்த இரு மரபுமேகாரணமாகும். பல புகழ் பூத்த கல்விமான்கள் உருவாகியுள்ள இம் மண்ணிலிருந்து வெளிவரும் ''வித்தியா''வை ஈழத்தமிழ் பாரம்பரியத்தின் சார்பாக வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்) என மேலும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் வாழ்த்துரைகளை கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ சிவஞானசுந்தரம், ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் ஆகியோரும்; ஆய்வுரையை ஓய்வு பெற்ற கல்விப்பணிப்பாளர் கோ.சி.வேலாயுதமும் நிகழ்த்தினார்.

இச் சஞ்சிகையின் முதற் பிரதியை பொறியியலாளர் லயன் இ. நடராசா பெற்றுக் கொண்டார்.

(செ-106)

## கொடிகாமம் வழமைக்கு திரும்பியது

(வரணி)

கொடிகாமப் பகுதி தற்போது வழமை நிலைக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சியிலிருந்து கொடிகாமப் பகுதிக்கு போக்குவாத்துச் சேவை நடைபெறுவதாகவும் கடைகள், பொதுச்சந்தை என்பனவற்றில் வியாபாரம் நடைபெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-28)

## மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால்

(ஏறாவூர்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமலநாயகம் சௌந்தரநாயகம் சுட்டுக் கொல்லப்பட்டமையை கண்டித்து நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இக்ஹர்த்தாலை ஒட்டி பாடசாலைகள் அலுவலகங்கள் எவையும் இயங்கவில்லை. அத்துடன் போக்குவரத்துகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டன.

(ச-108)

# இலங்கை மக்களுக்கு நீடித்த அமைதிஏற்படுத்த இந்தியாவின் கட்டாய பங்களிப்பு அவசியம்

## பிரதமருக்கு இந்துசமய பேரவை செயலர் அவசரமகஜர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசாங்கத்துடனும் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை ஆரம்பிப்பதற்கான முயற்சியில் நோர்வே அரசு ஈடுபட்டு வரும் இவ்வேளையில் தாங்களும் தங்கள் அரசாங்கமும் இவ்அரிய சந்தர்ப்பத்தில் தலையிட்டு இலங்கை வாழ் மக்களுக்கு நீடித்த அமைதி ஏற்படுத்த ஆக்க பூர்வமான பங்களிப்பை நல்க வேண்டும்.

யாழ்ப்பாணம் இந்து சமய பேரவையின் செயலர் சி. சக்திகிரீவன் இந்தியப்பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய்க்கு அனுப்பிய அவசர மகஜரில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்மகஜரில் வேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் நீண்டகாலமாக தொடரும் வடக்கு-கிழக்கு யுத்தத்தால் கோடிக் கணக்கான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டதுடன் 2ஆயிரதிற்கும் மேற்பட்ட இந்து ஆலயங்கள் முழுமையாக அல்லது பகுதியாக தாக்கப்பட்டுள்ளன.

வாலாற்றுப்பெருமை பெற்ற நகுலேஸ்வரம் (கீரிமலை) மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில்போன்றவற்றுக்கு இந்துக்கள் சுதந்திரமாக சென்று வழிபட முடியாதுள்ளது.

பல்லாயிரக்கணக்கானோர் கொன்று குவிக்கப்பட்டுள்ளதுடன் பலர் அநாதைகளாக்கப்பட்டுள்ளனர்.

இலட்சக்கணக்கானோர் தமது வீடுகளை இழந்து தெருத்தெருவாக அலைகின்றனர்.

சைவச்சிறுவர் இல்லம், மற்றும் பொது நிறுவனங்கள் யாவும் இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தற்காலிகமாக செயற்பட்டு வருகின்றன.

இனத்துவேஷம் கொண்ட சிங்கள அரசியல் தலைவர்கள் பலர் பிரச்சினையை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கு தடைக்கல்லாகவே செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# மறுவாழ்வுமுகாம் தாக்கப்பட்டது மூன்று வாகனங்கள் சேதமாகின

(கோலாலம்பூர்)

போதைவஸ்து மறுவாழ்வு முகாம்ஒன்று அங்குள்ளவர்களாலேயே தாக்கப்பட்ட சம்பவம் ஒன்று அண்மையில் மலேசியாவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

மலேசியா தெற்கு போதைப் பழக்கமறுவாழ்வு முகாமிலுள்ளநானூற்று முப்பதுபேர் அதந் முகாமையும், முகாம் அலுவலகத்தையும், அதிகாரிகள்வசிப்பிடக்கட்டடங்களையும் தாக்கி தீவைத்துச் சேதப்படுத்தியதுடன் பொருட்களையும் அப்புறப்படுத்தியுள்ளார்கள்.

இத் தாக்குதலில் போதைவஸ்து மறுவாழ்வுமுகாமுக்குச் சொந்தமான மூன்று வாகனங்களும் சேதப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முகாமிலுள்ளவர்கள் முகாமுக்குள்ளே தடைசெய்யப்பட்ட போதைவஸ்துக்களை பாவித்தமையைக் கண்டுபிடித்த அதிகாரிகள் கண்டித்ததாகவும் அதனைத் தொடர்ந்தே ஆத்திரமடைந்த மறுவாழ்வுக்காரர் மேற்படி சேதங்களைச் செய்தாரகளென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-து)

## தேங்காய் விற்பனை மும்முரம்

நெல்லியடி, சரவெட்டி கோவிற்சந்லையில் தேங்காய் விற்பனை வெகுமும்முரமாக இடம்பெற்று வருகிறது

தென்மராட்சியிலிருந்த பெருந்தொகையாக கொண்டுவரப்பட்டு வடமராட்சிப் பகுதியில் விற்கப்படுவதாலேயே பெருமளவு தேங்காய்கள விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கடமையை செய்யுமாறு

# கட்டளையிட்ட இராணுவமேஜர்மீது கண்டபடி துப்பாக்கி பிரயோகம்

(கொழும்பு)

கடமையைச் செய்யுமாறு கட்டளையிட்ட அதிகாரியை இராணுவச்சிப்பாய் ஒருவர் கண்டப்படி சுட்டுத்தள்ளினார்.

திருகோணமலை ஹேதுல்டுவம் என்ற இடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இவ் அசம்பாவிதம் பற்றி தெரியவந்துள்ளதாவது,

மேற்படி இடத்தில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாயை கடமையை ஒழுங்காக செய்யுமாறு மேஜர்தர இராணுவ அதிகாரி கட்டளையிட்டார்.

இதனால் கோபம் மிகுந்த மேற்படி சிப்பாய், தன்வசமிருந்த ரி-56 ரக துப்பாக்கியால் கண்மூடித்தனமாய் சுட ஆரம்பித்தார்.

இச்சம்பவத்தில் அகப்பட்ட இராணுவ வீரர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார் மேஜர்தர அதிகாரி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ)

# கடற்றொழிலாளர் நிவாரணம் பாவனைக்கு உகந்ததாக இல்லை

## பாதிக்கப்பட்டோர் புகார்

வடமராட்சிப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கார்த்திகை மாத உலர் உணவு நிவாரணப் பொருட்கள் தரமற்றவையாக காணப்படுவதாக சம்பந்தப்பட்டோர் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த 5 வருடங்களாக பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகின்ற போதிலும், தொடர்ந்தும் பாவனைக்குதவாத பொருட்களே வழங்கப்பட்டு வருவதாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் செயலாளர் எஸ். குமாரசூரியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் இது தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்;

வழங்கப்படும் அரிசி எந்த இனத்தைச் சார்ந்தது என்பதைக் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு பல்வகை அரிசிகள் கலந்ததாகவும் புழுக்கூடுகள் நிரம்பியதாகவும்மனிதர்உண்ண முடியாத அளவுக்கு காணப்படுகிறது.

அத்துடன், தம்மை கடலில் இறங்கி ஒழுங்காக தொழில் செய்ய அனுமதித்தால் நிவாரணத்தை நம்பி நிற்கும் நிலை ஏற்படாது என்றும் குறிப்பிட்டார். இதேசமயம்,

இது தொடர்பாக அரச அதிபர் மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோரின் கவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (உ-43)

## வீதி திருத்தம்

நீண்ட காலமாகதிருத்தஞ் செய்யப்படாது இருந்த அல்வாய் கிழக்கு அத்தாயிலிருந்து தாமன் தோட்டம் வரையான விவசாய வீதி திருத்தஞ்செய்யப்பட்டுள்ளது

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையினர் இவ் வீதியை திருத்தம் செய்துள்ளனர். (செ-23)


## வழங்குனர்களையும். . . .

குறிப்பு:-

எந்திரவியல் சேவைகளுக்கு விண்ணப்பிப்பவர்களிடம் இருந்து பின்வரும் மேலதிக தகவல்கள் கோரப்படுகின்றன.

அ) விண்ணப்பதாரர் யாழ். பல்கலைக் கழக வவுனிய வளாகத்தில் வேலைகளை செய்ய ஆர்வமாய் இருந்தால் அதுபற்றி விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். அத்துடன் அம்மாவட்டத்திலுள்ள தமது கிளை / பிரதான காரியாலய விலாசம், அம்மாவட்டத்திற்குரிய வியாபாரப்பதிவு அத்தாட்சியுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆ) உங்கள் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டிடக் கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களை (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 6 இற்கு மட்டும்) தருக.

★ சேவைகள் / வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(கி-1027)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

நேரம்:- 1 மணி

## தமிழ் மொழியும் இலக்கியமும்-1

தொகுப்பு: நல்லையா சுப்பிரமணியம்
(யாழ்/ ஏழாலை சைவ மகாஜனா வித்தியாலயம்).

**பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

1) பிரச்சினைகள் மிக்க நாடுகளில் வாழ்வதை விட அடவியில் வாழ்தல் சிறப்புடையது. அடவி என்பது
1) கிராமம் 2) வையகம் 3) காடு 4) நகரம்

2) உலகில் நடைபெறும் போர்களில் பொதுமக்களே பெரும் அவலம் அடைகின்றனர். அவலம் என்பது
1) நன்மை 2) இலாபம் 3) பெருமை 4) துன்பம்

3) இராமபிரானுக்கு கனிதரும் கானகம் மகிழ்ச்சி தந்தது. கனி என்பதன் எதிர்ப்பதம்
1) பழம் 2) மரம் 3) காய் 4) பிஞ்சு

4) மக்கள் யாவரும் வையகம் போற்ற வாழ்தல் வேண்டும். வையகம் என்பதன் எதிர்ப்பத
1) வானகம் 2) பூமி 3) கொடுத்தல் 4) வெளியே

5) நூர்ஜஹான் குறுகிய காலத்தில் விதவையானாள். விதவை என்பதன் எதிர்ப் பால்
1) தபுதாரி 2) தபுதாரன் 3) கணவன் 4) மனைவி

6) ஒலிம்பிக் போட்டியில் முதலிடம் பெற்றவர்களுக்கு வழங்கப்படுவது.
1) தங்கப்பதக்கம் 2) கேடயம்
3) வெண்கலப் பதக்கம் 4) வெள்ளிப்பதக்கம்

7) எமது பாடசாலை சமூகக்கல்வி மாணவ மன்றத்திற்கு தலைமை தாங்கியவர்,
1) அதிபர் 2) ஆசிரியர் 3) செயலாளர் 4) தலைவர்

8) அம்புஜம் என்ற வடசொல்லின் திருந்திய தமிழ்வடிவம்
1) தாமரை 2) அம்புயம் 3) அங்குசம் 4) மல்லிகை

9) தர்மம் செய்தவர்கள் வீடுபேறு அடைவர். வீடு பேறு என்பது
1) இல்லம் 2) நரகம் 3) சுவர்க்கம் 4) நாடு

10) நேற்று இடம் பெற்ற கடும் மழையினால் மாணவர்கள் பலர் படசாலைக்குச்
1) சமுகமழிக்கவில்லை 2) சமுகமளிக்கவில்லை
3) சமூகமழிக்கவில்லை 4) சமூகமளிக்கவில்லை

11) கொன்றான் என்ற சொல்லின் பகுதியாக அமைவது
1) கொல் 2) கொன் 3) கொன்று 4) கொன்றை

12) அவன் அவ்விடத்தை விட்டு அகன்று உடுவிலை அடைந்தான். இவ்வாக்கியத்தில் புறச்சுட்டு சொல்
1) அவன் 2) அவ்விடம் 3) அகன்று 4) அடைந்தான்

13) பின்வருவனவற்றில் பெயராக மட்டும் அமையும் சொல்
1) படி 2) மறை 3) மரை 4) கரை

14) இரட்டைக் கிளவியாக அமைவது
1) கலகல 2) சிறிய சிறிய 3) பென்னம் பெரிய 4) கிட்டத்தட்ட

15) ச், ற், ப், எ, அ என்பவற்றின் இன எழுத்துக்களாக அமைவது
1) ச,ற,ப,அ,எ 2) ஞ்,ன்,ம்,ஏ,ஆ 3) அ,எ,ப,ற,ச 4) க்,ச்,ட்,த்,ப்,ற்

16) மொழிக்கு இறுதியில் மட்டும் அமையும் வினா எழுத்துக்கள் எவை?
1) ஆ,ஓ 2) னா ளா 3) எ,யா 4) ஏ,ஓ

17) நெல்லிற்கு குவியல் போல பல்லிற்கு
1) வரிசை 2) வெண்மை 3) குவியல் 4) கூட்டம்

18) உறுமும் தொனியுடையவை
1) நாய்,பன்றி 2) பன்றி,புலி 3) நாய்,புலி 4) கரடி,பூனை

19) பந்தி எனப்படுவது
1) மாடுகள் கட்டப்படும் இடம் 2) யானைகள் கட்டப்படும் இடம்
3) குதிரைகள் கட்டப்படும் இடம் 4) கோழிகள் வளர்க்கப்படும் இடம்

20) பனைக்கு வடலி போல நெல்லிற்கு
1) மணி 2) தாள் 3) அரிசி 4) நாற்று

(தொடரும்)

# பல்கலை மாணவரால் விவசாயவாரம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாண பல்கலைக் கழக விவசாய பீட மாணவர்களால் நேற்று முதல் இவ்வாரம் விவசாய வாரமாக அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. மாணவர்கள் விவசாயிகளைச் சந்தித்து அவர்களால் பின்பற்றிவரும் விவசாய செய்முறைகளைப்பற்றி ஆராயவும் உள்ளனர்.

அதேசமயம் விவசாயிகளுக்கென கருத்தரங்கொன்றையும் நடாத்தவுள்ளனர். இதில் கிருமி நாசினி பாவித்தலின் நன்மை தீமைகளைப் பற்றி விளக்கமளித்தல் மற்றும் நவீன விவசாய முறைகள் பற்றி அறிவுரை வழங்குதல்.

இயற்கை பசளையை பயன்படுத்துதலை அதிகரித்தல் தொடர்பான அறிவுரைகளும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேசமயம் மாணவர்களுக்கிடையில் போட்டிகள், கருத்தரங்குகள் திரைப்பட கண்காட்சிகள் என்பனவும் இவ்விவசாய வாரத்தின் நிகழ்ச்சிகளாக நடைபெறவுள்ளனவென்று தெரிவிக்கப்படுகிறது. (க-வி)

# மீளாய்வுச் செயலமர்வு

(அரியாலை)
சண்டிலிப்பாய், சங்கானை கோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான பாடமேம்பாட்டுத்திட்ட மீளாய்வுச் செயலமர்வு எதிர்வரும் 18ஆம்திகதி சனிக்கிழமை யாழ்/ இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக வலிகாமம் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் கோ. மகேந்திரராஜா தெரிவித்துள்ளார். (செ-106)

# யுனிசெவ் உதவி

(மானிப்பாய்)
யுனிசெவ் நிறுவனம், நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய வளவில் புதிய மலசலகூடமொன்றை அமைப்பதற்கு பதினையாயிரம் ரூபாவையும், நவாலி முருகானந்தா பாலர் பாடசாலை மலசல கூடத்தை திருத்தி அமைப்பதற்கு ஐயாயிரம் ரூபாவையும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக வழங்கியுள்ளது. (உ-120)

# உயிரிழந்த படையினரின் நினைவுவைபவத்தையொட்டி கொழும்பில் பாதுகாப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கில்தொடரும் யுத்தத்தினால் உயிரிழந்த இராணுவத்தினரின் நினைவுதின வைபவம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் இடம்பெற்றது.

இராணுவத்தினரின் நினைவுத் தூபிக்கருகில் இடம்பெற்ற மேற்படி வைபவத்தில் இராணுவத்தளபதி லயனல் பலகல்ல, விமானப் படைத்தளபதி சிசில் திசேரா உட்பட கடற்படை அதிகாரிகள், இராணுவ அதிகாரிகள், உயர் அதிகாரிகள் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

இவ்வைபவத்தை ஒட்டி கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-வ)

# தோட்டவேலை செய்த 2 பேர்படையினரால்கைது

(யாழ்ப்பாணம்)
தோட்ட வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இருவரை இராணுவத்தினர் கைது செய்துள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

★ இராசையா ஸ்ரீரங்கநாதன் (வயது 35) மந்துவில் கொடிகாமம்

★ கணபதி பொன்னம்பலம் (வயது 45) மந்துவில் கொடிகாமம் ஆகிய இருவரையுமே தோட்டத்தில் வைத்து கடந்த 4 ஆம் திகதி கைது செய்யப்பட்டதாகவும் கைதுக்கான பற்றுச்சீட்டு வழங்கப்படவில்லை என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-12)

# இடமாற்றம்

(மானிப்பாய்)
வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பணிபுரியும் சமூகசேவை உத்தியோகத்தர்கள் 27 பேர் அடுத்த ஆண்டு முதல் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இவர்களுக்கான இடமாற்றப் பட்டியல் வடகிழக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களப்பணிப்பாளரினால் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ் மாவட்டத்திலிருந்து பின்வரும் நால்வர் இம் மாவட்டத்திற்குள்ளேயே இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எம். தர்மலிங்கம் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலிருந்து கரவெட்டிக்கும் கரவெட்டி பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கே. தியாகராசா பருத்தித்துறைக்கும், உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி. செல்வம் சண்டிலிப்பாய்க்கும்சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ. அமிர்தலிங்கம் உடுவிலுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (உ-120)

# 15 ஆம் திகதி ஆரம்பம்

(செம்பியன்பற்று)
பலாலி ஆசிரியர் கலாசாலை மீண்டும் நாளை புதன்கிழமை ஆரம்பமாகும் என ஆசிரியர் கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

பலாலி, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சைக்கு செல்வதற்காக கடந்த 6 ஆம் திகதி முதல் விடுமுறை வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-42)

# வீதிசீரில்லை

(மல்லாகம்)
இணுவில் கிழக்கு புகையிரத நிலையவீதி நீண்டகாலமாக திருத்தஞ் செய்யப்படாது உள்ளது.

இதனால் இவ்வீதியால் பயணஞ் செய்வோர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிவருகின்றனர்.

இவ்வீதித் திருத்தத்திற்காகக் கற்கள் பறிக்கப்பட்டுள்ள போதிலும் இன்னமும் திருத்தஞ் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (செ-ப-14)

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப்படுகின்றன.

**சங்கானை**

| | |
|---|---|
| 164220 ஏ | 164220 பி |
| 164220 சி | 164220 டி |
| 169313 ஏ | 169313 பி |
| 169313 சி | 169313 டி |
| 169313 ஈ | 169313எவ் |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 149711 ஏ | 149711 பி |
| 154479 ஏ | 154479 பி |
| 154479 சி | 154558 ஏ |
| 159776 ஏ | 162619 ஏ |
| 162651 ஏ | 162651 பி |
| 162651 சி | 163762 ஏ |
| 163763 ஏ | 163763 பி |
| 163763 சி | 166943 ஏ |
| 166943 பி | 166976 ஏ |
| 167976 பி | 166992 ஏ |
| 166992 பி | 167005 ஏ |
| 167045 ஏ | 167045 பி |
| 167130 ஏ | 167130 பி |
| 167131 ஏ | 167131 பி |
| 168249 ஏ | 168249 பி |
| 168249 சி | 168249 டி |

**நல்லூர்**

| | |
|---|---|
| 150655 ஏ | 158844 ஏ |
| 166438 ஏ | 166438 பி |
| 166439 ஏ | 166614 ஏ |
| 166716 ஏ | 166716 பி |
| 166872 ஏ | 168946 ஏ |
| 168946 பி | 168946 சி |
| 169078 ஏ | 169078 பி |
| 169155 ஏ | 169155 பி |
| 169207 ஏ | 169247 ஏ |
| 169262 ஏ | 169276 ஏ |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 138511 ஏ | 138511 பி |
| 158886 ஏ | 158886 பி |
| 166643 ஏ | 166644 ஏ |
| 166762 ஏ | 166769 ஏ |
| 166778 ஏ | 166778 பி |
| 166779 ஏ | 166780 ஏ |

**தெல்லிப்பழை**

| | |
|---|---|
| 169040 ஏ | 169140 ஏ |
| 169258 ஏ | |

**உடுவில்**

| | |
|---|---|
| 166597 ஏ | 166754 ஏ |
| 166754 பி | 169034 ஏ |
| 169117 ஏ | 169162 ஏ |
| 169162 பி | 169176 ஏ |
| 169176 பி | 170003 ஏ |
| 170414 ஏ | |

## இன்று ஒரு தகவல்

# வாழ்க்கை எப்படியானது

ஒரு செடியில் இரு நெட்டுக்கள். ஒன்று பூ. மற்றது மொட்டு. பூ இதழ் விரித்து மணம் பரப்பியது.

'' ஆ! இந்தப் பூ எவ்வளவு அழகாக இருக்கிறது பார்த்தீர்களா?'' மனைவி கணவனைக் கேட்கின்றாள்.

''ஆமாம் அதன் அழகு மட்டுமென்ன நறுமணம் கூட உள்ளத்தைக் கவருகின்றதல்லவா'' கணவன் மனைவியின் வார்த்தையை ஆமோதித்துப் பூவிற்கு வரட்டுத்திமிர் ஏற்பட வழிவகுக்கின்றாரா?

தனது அழகைப் பற்றி அவர்கள் கதைத்ததைக் கேட்ட பூ மகிழ்ச்சி தாங்க முடியாமல் மனதிற்குள் துள்ளும் ஓர் ஏதோ இனம் புரியாத உணர்வைச் சிரிப்பாக உதிர்த்து விட்டு மொட்டை ஏளனமாகப் பார்க்கின்றது.

மொட்டு ஒன்றும் தெரியாதது போல உலகைப் பார்க்கின்றது. மௌனம்! சிறிது அமைதி அடுத்த கணம்...,

''உனது வாழ்வும் ஒரு வாழ்வா? உன்னில் அழகில்லை. அடுத்தவரைக் கவரும் தன்மையில்லை. இருந்தும் வாழ்கின்றாயே, ஏன் நீ இறந்து போனால் என்ன? யாராவது கவலைப்படப் போகின்றார்களா? — பூ மொட்டைப் பார்த்துக் கேட்டது''.

ஒரு செடியில் முளைத்தவை. ஆனால் அவைகளுக்குத் தான் எவ்வளவு பொறாமை.

''நீ என்னிலும் பார்க்க வயதில் முதிர்ந்திருந்தபொழுதிலும், உனக்கு அதற்குத் தக்க அறிவில்லாமற் போனதற்காக நான் அனுதாபப் படுகின்றேன்'' — மொட்டுப் பூவைப் பார்த்து தாழ்ந்த குரலில் சொன்னது.

''என்னை மற்றவர்கள் புகழ்வதைப் பார்க்க உனக்குப் பொறாமையாக இருந்தால், அதற்காக எனக்கு அறிவில்லை என்று சொல்லுவதா? சீ! வெட்கம்'' —பூ சிரித்துக் கொண்டே சொன்னது.

''உன்னை மற்றவர்கள் புகழ்கின்றார்கள் என்பதற்காகப் பொறாமைப்படுபவன் நானல்ல. வாழ்க்கை என்றால் எப்படிப்பட்டது என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் பேசினாயே, அதற்காகத் தான் உனக்கு அறிவில்லை என்று சொன்னேன்'' —மொட்டுச் சொன்னது.

''நானா வாழ்க்கை எப்படிபட்டது என்பதைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை'' — பூ ஏளனமாகக் கேட்டது

மொட்டுப் பதில் சொல்லவில்லை. மௌனம் சாதித்தது. அந்த மௌனத்தில் ஒரு நாள் செத்து மடிந்து இரண்டாம் நாள் உதயமாயிற்று.

மொட்டு இதழ் விரித்து மணம் பரப்பியது... ஆனால் பூ?...

நன்றி
ஈழச்சுடர்.

## ஜீப் வண்டி மீது கிளைமோர் தாக்கு சப் இன்ஸ்பெக்டர் காயம்

(கொழும்பு)

அக்கரைப்பற்றிலிருந்து பொத்துவில் நோக்கிச்சென்றுகொண்டிருந்த விசேட அதிரடிப்படையினரின் ஜீப் வண்டி கிளைமோரின், தாக்குதலில் சிக்கியதில் சப் இன்ஸ்பெக்டர் மற்றும் கான்ஸ்டபிள்களும் படுகாயமடைந்ததாக விசேட தகவல்நிலையம் தெரிவித்துள்ளது.

காயமடைந்தோர் அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல் நிலையம் மேலும் தெரிவித்துள்ளது. (க)

## புத்தூர் கிழக்கில் படை நடவடிக்கை

(கொழும்பு)

புத்தூர் கிழக்குப் பகுதியில் படையினர் அண்மையில்மேற்கொண்ட இராணுவநடவடிக்கையின்போது விடுதலைப்புலிகள் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் ஏனையோர் இழப்புகளுடன் பின்வாங்கி விட்டதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

அப்பகுதியில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது சடலம் ஒன்று கண்டெடுக்கப்பட்டதுடன், 03 - ரி 56 ரக ஆயுதங்கள், ஆர். பி. ஜி. ரக கைக்குண்டு, இரவு நேர தொலைக்காட்டி, 01, கிரனேற்று - 01, சீருடைத்துணிகள் என்பனவும் படையினரால் மீட்கப்பட்டன. (க)

## கராத்தே போட்டியில் யாழ்ப்பாணத்தவர்க்கு அனுமதி இல்லையாம்

(சுண்டுக்குளி)

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் 25 வது வருட நிறைவை முன்னிட்டு அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட கராத்தே போட்டிகளில் யாழ்ப்பாணத்தவர் எவரும் கலந்துகொள்ள வாய்ப்பளிக்கப்படவில்லை.

இம்மாதம் 3,4,5 ஆம் திகதிகளில் சுகததாச விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட இப்போட்டிகளில் பங்குகொள்ள யாழ்ப்பாணத்தவர் ஒருவருக்குக்கூட அழைப்பு விடுக்கப்படாத போதிலும், யாழ்.பல்கலைக்கழக பகுதி நேர கராத்தே பயிற்றுநரும் 4 வது கறுப்புப்பட்டி கராத்தே வீரருமான ரஞ்சித் சசிலேந்திரகுமார் இப்போட்டிகளைப் பார்வையிடுவதற்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டிகளின் போது. இலங்கையின் கராத்தே விளையாட்டின் தந்தை என வர்ணிக்கப்படும் ஆசான் பொனி றொபேட்டுக்கு (வயது 72) இலங்கைகராத்தே சம்மேளனத்தின் தலைவர் இராமச்சந்திரனால் 8 வது கறுப்புப்பட்டி வழங்கி கௌரவிக்கப்பட்டது. (உ-ச-110)

## 150 மெற்றிக் தொன் வெளிநாட்டுவிதை உருளைக்கிழங்கு யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படும்

### விவசாயத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பயிரிடுவதற்கென வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 150 மெற்றிக் தொன் விதை உருளைக் கிழங்கு இவ்வாரம் கப்பல் மூலம் அனுப்பப்படுமென விவசாயத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் சுமார் 200 ஹெக்டேயர் நிலத்தில் கால போக பயிர்ச்செய்கையாக இவ்விதை உருளைக்கிழங்கு பயிரிடப்படுமெனவும், இதனை விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் யாழ் மாவட்டத்தில் உருளைக் கிழங்கு அறுவடை செய்யும் காலங்களில் கொழும்பிலிருந்து உருளைக் கிழங்கு இறக்குமதி செய்யப்படுவதனால் விலை வீழ்ச்சி ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்றும். உருளைக் கிழங்கு அறுவடை காலத்தில் யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் உருளைக்கிழங்கு அனுப்புவதைத்தடைசெய்யப்படவுள்ளதாகவும்விவசாயத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (க-வி-59)

## வயோதிபர் படுகாயம்

(ஈச்சமோட்டை)

சங்கானைச் சந்தையை அண்டிய பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சங்கானை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓய்வூதியரான ஞானப்பிரகாசம் (வயது-91) என்பவரே வீதியால் சென்று கொண்டிருந்தவேளை மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்வாறு படுகாயமடைந்தவராவார். (உ-59)

## கரணவாயில் சுற்றிவளைப்பு

(கரணவாய்)

கரணவாய் அண்ணா சிலையடிப்பகுதியில் கடந்த 10ஆம்திகதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டுத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டதுடன், குடும்ப விபரமும் பரிசீலனை செய்யப்பட்டது.

இருந்த போதிலும் எவரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் இப்பகுதி அடிக்கடி சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்படுவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-27)

## இடம் பெயர்ந்த மக்களுக்கான கொடுப்பனவு

(மானிப்பாய்)

அண்மையில் இடம்பெற்ற அனர்த்தங்கள் காரணமாக தென்மராட்சி பளை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்து இடம்பெயர்ந்து வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு நாளை 15ஆம் திகதி முதல் சங்கானை மக்கள் வங்கி கிளையில்வைத்து வழங்கப்படுமென்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் என். வேதநாயகன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய 15ஆம் திகதி புதன் ஜே 149, ஜே 140, கிராம சேவகர்பிரிவுகளுக்கும் 16ஆம் திகதி வியாழன் ஜே 148 கிராம சேவகர் பிரிவுக்கும், 17ஆம் திகதி வெள்ளிஜே 138 கிராமசேவகர்பிரிவுக்கும் 20ஆம் திகதி திங்கள் ஜே136 கிராமசேவகர் பிரிவுக்கும் 21ஆம் திகதி ஜே129, ஜே130 ஜே131, ஜே133, ஜே134, ஜே137, ஜே139,, ஜே141, ஜே142, ஜே143, ஜே147, ஜே150, ஜே151, ஜே155, கிராமசேவையாளர் பிரிவுக்கும் 22ஆம் திகதி ஜே144, ஜே145, ஜே146 கிராமசேவகர் பிரிவுகளுக்கும் வழங்கப்படும். (உ-120)

## ஊரடங்குவேளை நெஞ்சுவலி பெண் பரிதாப மரணம்

(வடமராட்சி கிழக்கு)

நள்ளிரவு வேளை நெஞ்சுவலி ஏற்பட்ட பெண்ணுக்கு ஊரடங்குச் சட்டம் எமனாக அமைந்தது.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

வடமராட்சி கிழக்கு உடுத்துறைப்பகுதியில்இருந்துஇடம்பெயர்ந்து, பருத்தித்துறை இன்பருட்டிப் பகுதியில் வசித்து வந்த ஆனந்தராசா ரூபதேவியம்மா (வயது 33) என்ற மூன்று பிள்ளைகளின் தாயாருக்கு கடந்த சனிக்கிழமை நள்ளிரவுவேளை திடீரெனநெஞ்சுவலி ஏற்பட்டது.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் குறித்த நேரத்தில் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று உரிய சிகிச்சை வழங்க முடியாமையால், பரிதாபமாக அப்பெண்மணி மரணமடைந்தார். (உ-43)

## உலர்உணவு நிவாரணம் பெற்றுக்கொள்வதில்சிரமம்

(கரணவாய்)

தென்மராட்சிப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து வடமராட்சியின் பல பாகங்களிலும் வசித்துவரும் மக்கள் தமக்குரிய உலர்உணவு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் இடத்தில் இருந்து, பல மைல் தொலைவில்உள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களில் இவர்களுக்குரிய உலர்உணவு நிவாரணத்தைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இதனால், மக்கள் போக்குவரத்துச் சிரமங்களையும் வேறுபல இடைஞ்சல்களையும் எதிர்கொண்டுள்ளனர்.

இதுவிடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் அவர்கள் பாராமுகமாக நடந்துகொள்வதாக பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவித்துள்ளனர். (உ-27)

## இலங்கை கடற்படைக்கு விமானப்பயிற்சியாம்

(கொழும்பு)

இலங்கையின் கடற்படையினருக்கு விமானங்களைச் செலுத்தும் பயிற்சியினை வழங்க இந்தியா முன்வந்திருப்பதாக பாதுகாப்புப் படைத்தரப்புதகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த வாரம், இலங்கை கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் சிசில் திசேரா இந்திய விஜயம் மேற்கொண்டவேளை புதுடில்லியில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தானது.

இலங்கைக் கடற்படையினர், உலங்குவானூர்திகளை சுமந்து செல்லவல்லதும், புலிகளின் அதிவேகப் படகுகளை இலக்குவைத்து தாக்கக்கூடியதுமான ரோந்துக்கப்பல்கள் இரண்டை இந்தியாவிடம் கொள்வனவு செய்திருப்பதாகவும்.

இதற்கு அன்பளிப்பாக இலங்கை கடற்படையினருக்கு இந்தியா உலங்குவானூர்தி ஒன்றினை வழங்கியிருப்பதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேசமயம், விமானப் படையினரின் ஆதரவின்றி இலங்கை கடற்படையினர் இவ்வருடம் விமானப்படைப் பிரிவொன்றை ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது (உ)

## சேதமான ஆலயங்களின் விபரங்கள் திரட்டல்

(மானிப்பாய்)

வடக்கு-கிழக்கு பகுதியில் இடம்பெற்று வரும் யுத்தத்தினால் சேதமடைந்த ஆலயங்களின் விபரங்கள் திரட்டப்படுகின்றன.

யுத்தநிலை காரணமாக நித்தியபூசை செய்ய இயலாத நிலையில் இருக்கும் ஆலயங்கள்பற்றிய விபரங்கள் யுத்தத்தினால் அழிவடைந்து சேதமாக்கப்பட்ட ஆலயங்கள் பற்றிய விபரங்கள் என்பனவற்றை சேகரித்து தருமாறு வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடகிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய இந்துசமய கலாசார திணைக்களம் இதற்கான விபரங்களை கோரியுள்ளது.

இதற்கு விண்ணப்பிப்போர் பின்வரும் விபரங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பாக அந்தந்தப்பிரிவு பிரதேச செயலகங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

★ ஆலயங்களின் பெயர் முகவரி
★ ஆலயம் அமைந்துள்ள மாவட்டம்
★ ஆலயம் அமைந்துள்ள பிரதேச செயலர்பிரிவு
★ ஆலயம் பாதிப்புக்குள்ளான திகதி
★ நித்தியபூசை நடத்த ஒரு மாதத்திற்கு தேவையான செலவுவிபரம், என்பனவாகும். (க-120)

**உலக தரிசனம்**

# மலைக்குகைக்குள் சென்ற ரயிலில் தீ;
# நூற்றி எழுபத்திரெண்டு பேர் உடல் கருகிப்பலி

## ஆஸ்திரியாவில் சம்பவம்

(வியன்னா)

ஆவுஸ்திரியாவில் மலைக் குகைக்குள் சென்று கொண்டிருந்த ரயிலில் தீப் பிடித்ததால் நூற்றி எழுபத்திரெண்டு பேர் உடல் கருகிப் பலியாகினர்.

பனிபடர்ந்தமலை உச்சியை நோக்கி குகைக்குள்ளால் சென்று கொண்டிருந்த போதே ரயிலில் தீப்பிடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

சுரங்கத்தில் சென்ற ரயில் தீப்பிடித்ததையடுத்து ஏற்பட்ட புகை மூட்டத்தால் ஒரு பகுதியினர் மூச்சுத்திணறி இறந்திருக்கலாம் என்றும் ஒரு பகுதியினர் எரிந்து இறந்திருக்கலாமென்றும் சுயாதீன செய்தித் ஸ்தாபனம் ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த ரயிலில்சென்றநூற்றி எண்பது பேரில் அநேகமானோர் பனிச் சறுக்கு வீரர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

நீண்ட தூர குகையானதால் புகை போக வழியில்லாதிருந்ததாகவும்இதனாலே இவ்வளவு அனர்த்தமும் இடம் பெற்றதாகவும் மலை உச்சியான படியால் மீட்புப் பணிகள் இன்று தொடர முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் தீ பரவியதற்கான காரணம் குறித்து புலன் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ள அதேவேளையில் இயந்திரத்தில் ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறினாலேயே தீ பரவியிருக்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-து)

# பெற்றோலிய விலை அடுத்த ஆண்டு குறையும்

(ஜெனிவா)

அடுத்த ஆண்டு முதல் எண்ணெய் வகைகள விலை நறைவடைய இருப்பதாக ஒபெக் நாடுகள் கூட்டாக தெரிவித்துள்ளன.

ஒபெக் நாடுகளும் மற்றும் எண்ணெய் வள நாடுகளும் பெற்றோலிய உற்பத்தியைக் கூட்டியதன் விளைவாகச் சுத்திகரிக்கப்படாத எண்ணெய் அடுத்த அண்டு பெருவாரியாகத் தேங்கி விடுமென்றும் இதனல் உலகில் சுத்தி ரிககப்படாத எண்ணெய் விலை திடீரெனக் குறையுமென்றும் ஒபெக் நாடுகள் மேலும் தெரிவித்தன.

இதனையடுத்து ஒபெக்நாடுகளின் பொருளாதாரம் மந்த நிலை அடையுமென்பதால் எண்ணெய் உற்பத்தியைக் குறைக்க வேண்டும் என்று அந்த நாடுகள் தீர்மானிக்க இருப்பதாகவும் அவை மேலும் தெரிவித்தன. (க)

# இலஞ்சம் கொடுக்கும் கைங்கரியம் இந்திய பகுதிகளில் முன்னெடுப்பு

(சென்னை)

அரச அலுவலகங்களில் தமது வேலைகளை சுலபமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு இலஞ்சம் கொடுக்கும் கைங்கரியத்தில் பலர் ஈடுபட்டு வருவதாகவும் இந்தியாவின் கேந்திர நிலையங்களில் இவை மிக அதிகளவில் இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த திடுக்கிடும் தகவலை இந்திய மத்திய ஊழல் ஒழிப்பு கழகம் வெளியிட்டுள்ளது.

ஊழல் ஒழிப்புக் கழகம் இந்தியாவின் லக்னோ, ஹைதராபாத், பூனா ஆகிய நகரங்களில் அரசாங்க காரியாலயங்களுக்கு வருபவர்களைப் பேட்டி கண்டபொழுதே அவர்கள் தங்களுடைய காரியங்களை செய்விப்பதற்காக பணத்தையோ பொருளையோ உரியவர்களுக்கு கொடுத்து காரியங்களை முடிப்பதாகத் தெரிவித்துள்ளார்கள்.

இதேவேளை சில நகரங்களில்காரியாலயங்களுக்கு உதவி பெறவருபவர்களிடம் வினாக்கொத்து கொடுத்து இலஞ்சம் கொடுப்பது பற்றி ஆய்வினை நடத்தியிருக்கிறார்கள்.

இந்த ஆய்வின் மூலம் அறுபது வீதமானவர்கள் அரச அலுவலகங்களில் இலஞ்சம் கொடுக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

இதேவேளை இலஞ்சம் கொடுப்பவர்களில் அனேகர் வர்த்தகர்களாகவும் தொழிலதிபர்களாகவும் காணப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## காங்கிரஸ் கட்சி தலைவர் தெரிவு

# விறுவிறுப்பான வாக்குப் பதிவு வெற்றி வாய்ப்பு சோனியாவுக்கே

(புதுடில்லி)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவியை நிர்ணயம் செய்யும் வகையிலான வாக்குப் பதிவுகள் நேற்று இந்தியாவில் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது.

இம்முறை காலம் சென்ற பிரதமர் ராஜிவ் காந்தியின் மனைவி சோனியாக ந்தியும், ஜிதேந்திர பி சாத்தும் கடுமையாக மோதிக் கொள்வதாக புதுடில்லிச் செய்திகள் தெரிவித்துள்ளன.

காங்கிரஸ்கட்சியை சேர்ந்த 9 ஆயிரம் பிரதிநிதிகள் இத்தேர்தலில் பங்கு கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர் வரும் புதன்கிழமையே வாக்கு எண்ணும் பணிகள் இடம்பெறவுள்ள போதிலும் திருமதி சோனியா காந்திக்கே வெற்றி வாய்ப்புகள் அதிகம் காணப்படுவதாக கட்சி வட்டாரங்களிலிருந்து வெளிவரும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (க-து)

# பாடசாலை மீது எறிகணைத் தாக்கு

## மாணவர்கள் படுகாயம்

(தெஹ்ரான்)

ஈராக்கின் தென்பகுதிக் கிராமம் ஒன்றில் அமைந்துள்ள பாடசாலை மீது மேற்கத்தைய நாட்டு விமானங்கள் மேற் கொண்ட எறிகணைத் தாக்குதலில் 4 பாடசாலை மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

தாக்குதல் விமானங்கள் மேற்கொண்ட எறிகணை வீச்சிலே இவர்கள் படுகாயமடைந்ததுடன் அப்பகுதி வீடுகள் மற்றும் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஈராக்- குவைத் யுத்தத்தைத் தொடர்ந்து, மேற்கத்தைய நாடுகள் ஈராக்குடன் கொண்ட கருத்துப் பிணக்குகள் காரணமாக இவ்வாறன தாக்குதல்களை அவை மேற்கொண்டு வருவது தெரிந்ததே

## மொஸ்கோ சென்ற

# பயணிகள் விமானம் கடத்தல் ஆயுததாரிகளுடன் பேச்சுவார்த்தை

## இஸ்ரேலியகுழு விரைவு

(ரெல்அவிவ்)

ரஷியத் தலை நகர் மொஸ்கோ நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் விமானம் ஒன்று ஆயுத தாரிகளால் கடத்திச் செல்லப்பட்டு தற்போது இஸ்ரேலில் தரை இறக்கப்பட்டுள்ளது.

58பயகணிளுடன் கடத்தப்பட்ட இவ் விமானத்திலுள்ள கடத்தல் காரருடன் பேச்சு நடத்தவென இஸ்ரேலில் இருந்து உயர் அதிகாரிகளைக் கொண்ட உயர்மட்டக்குழு பயணமாகியதாக இஸ்ரேலிய வானொலி தெரிவித்துள்ளது.

மேற்படி விமானம் கடத்தப்பட்டதற்கான காரணம் குறித்த தகவல் எதுவும் நேற்றுவரையில் வெளியிடப்படவில்லை.

குறிப்பிட்ட விமானம் மக்காஸ் நகரிலிருந்து மொஸ்கோ நோக்கி பயணம் செய்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

கடத்தப்பட்ட விமானத்தைச் சுற்றி பாதுகாப்புப் படையினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், தீயணைப்புப் படையினர் எந்த நிலைமையையும் சமாளிக்கும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலஸ்தீன கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேலிற்கு எதிராக மேற்கொள்ளும் சதிவேலையின் ஒரு முயற்சியே இந்த கடத்தல் நாடகம் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்

# புளோரிடா மாநில வாக்குகள் மீண்டும் எண்ணப்பட வேண்டும்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் பிரச்சினைக்குரிய புளோரிடா மாகாணத்தில் மீண்டும் கைகளால் வாக்குகளை எண்ண ஜனநாயகக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

அந்தக் கோரிக்கையில் இயந்திரங்கள் மூலமாக வாக்குகளை எண்ணும் போது சில வாக்குத் தாள்களில் துளை போடத் தவறி விட்டது கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும், கையால் வாக்குகளை ஒவ்வொன்றாக எண்ணுவதால் எந்தத்தவறுகளும ஏற்படாதென்றும் ஜோர்ஜ் டபிள்யு புஷ்சின் ஜனநாயகக் கட்சி கோரிக்கையில் தெரிவித்துள்ளது.

இதவேளை புளோரிடா மாநிலத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளில்மாத்திரம் மீண்டும் வாக்குகள் கையால் எண்ணுவதற்கு நடவடிக்கைகள் தொடர்வதாகவும் தெரியவருகிறது.

இது தொடர்பாக குடியரசுக்கட்சியின் அல்கூர்தெரிவிக்கையில் கையால் ஒவ்வொன்றாக வாக்கெண்ணும் முறையை விரும்பவில்லையென்றும் இது சட்டத்துக்கு மாறான செயலென்றும்குறிப்பிட்டார்.

இதனையடுத்துபுளோரிடா மாநிலத்தில் உள்ள நீதி மன்றில் கையால்வாக்கெண்ணும் முறைக்குஎதிராக வழக்கு ஒன்றினைதெடுத்துள்ளார். (து)

# துணை பாதுகாப்பு அமைச்சர் பதவியை இராஜினாமா செய்தார்

(சென்னை)

இந்தியப் பாதுகாப்பு துணை அமைச்சர் ஹரீம்கதக் நேற்று முன்தினம் தனது பதவியை இராஜினாமாசெய்தார்.

பொலிஸ் வீரர் ஒருவரை 1985 ஆம் ஆண்டு கொலை செய்தாரென இவருக்கெதிராக குற்றப்பத்திரிகை அகமதாபாக் நீதிமன்றத்தில் சென்றவாரம் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து தனது இராஜினமாவைபிரதமர் வாஜ்பாயிடம் நேற்று முன்தினம் கையளித்தாரென்றும் தெரியவருகிறது. (வி)

## உலக இஸ்லாமியரின்

# மூன்றாவது உச்சி மாநாடு கோலாகல ஆரம்பம்

உலக இஸ்லாமிய நிறுவனங்களின் மூன்றாவது உச்சி மாநாடு கட்டார் தலை நகரான டோகாவில் ஆரம்பமானது.

ஐம்பத்தியாறு நாடுகளின் அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் ஐக்கியநாடுகள் சபை பொதுச் செயலர் கோபி அனான் உள்ளிட்ட பொது நிறுவனங்களின் தலைவர்களும் இம்மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர்.

இம்மாநாட்டில் பார்வையாளர்களுமாக நாலாயிரம் பேர் இதில் கலந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாநாட்டில் பலஸ்தீன-இஸ்ரேலியப் பிரச்சினைகள் முக்கிய இடம்வகிக்கின்றதென்றும் இஸ்ரேலுடன் இஸ்லாமிய நாடுகள் தொடர்புகளை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் சில நாடுகள் வற்புறுத்திய போதிலும் எகிப்து போன்ற நாடுகள் அதனை எதிர்த்தன என்றும்தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் இஸ்லாமிய நாடுகள் எதிர்நோக்கும் சமூகம், பொருளாதாரம், அரசியல், மத, பண்பாடு பற்றிய எண்பத்தெட்டு வரைவுத் தீர்மானங்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. (க-து)

**செய்திப்பரல்**

- ★ கடத்தப்பட்ட ரஷ்யவிமானம் இஸ்ரேலில் தரையிறக்கப்பட்டு கடத்தல் காரர் சரணடைந்ததையடுத்து பயணிகள் விடுவிக்கப்பட்டனர்.
- ★ ஆஸ்திரிய ரயில் தீவிபத்தில் இறந்தவர்களுக்காக அந்நாட்டு அரசு இரண்டு நாள் துக்கதினம் அனுஷ்டிக்கிறது.
- ★ ரஷ்ய விமானத்தை கடத்தியவர் ரஷ்ய பிரஜை என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

- குறள்

வலம்புரி

## பாசாங்கை அறியட்டும்!

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்தமாதமளவில் நடைபெறவிருக்கிறது. பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நடைபெறும் இக் கூட்டத்தில் இலங்கைக்கு வழங்கப்படும் உதவித் தொகைபற்றித் தீர்மானிக்கப்படும். அதேபோல் இலங்கையும் பிச்சாடன பாத்திரம் ஏந்தியவாறு தனக்கு இவ்வளவு உதவி செய்யுங்கள்எனக்கோரும்.

இலங்கையில் இனப் பிரச்சினை நடைபெறுவதால் கிடைக்கும் உதவு தொகை குறைவாகவே இருக்குமென கடந்த காலங்களில் ஊகங்கள் தெரிவிக்கப்பட்டன, ஆனால் நிலைமை மாறாகவே அமைந்தது. கடந்த வருடங்களில் இலங்கை கேட்ட உதவித்தொகையிலும் பார்க்க அதிகளவு நிதிஉதவி கிடைத்துள்ளது. உதவி வழங்கும்போதெல்லாம் சம்பந்தப்பட்ட நாடுகள் இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணுமாறு இலங்கை அரசை வலியுறுத்திக்கேட்கும். ஆமாசாமி போட்டுவிட்டு உதவித்தொகையுடன் நாடு திரும்புவார்கள். அவ்வளவு தான், கொடுக்கப்பட்ட நிதியில் என்ன ஆயுதம், எந்த நாட்டில் கொள்வனவு செய்வதென தீர்மானிப்பார்களேயொழிய இனப் பிரச்சினையைத் தீர்க்க வழிகண்டார்களல்ல.

எனினும் இலங்கைக்கான உதவிவழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறும் காலப்பகுதியில் இலங்கை அரசு தமிழர்களின் விடயத்தில் அக்கறை உடையதுபோல், அவர்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுபோன்று போலி நாடகம் நடிக்கும்.

அந்நிலை இனியும் தொடராமல் இருக்க வடபுலத்திலுள்ள அரச சார்பற்றநிறுவனங்கள்பொது அமைப்புகள், மத அமைப்புகள் ஒன்றிணைந்து தமிழர்களுக்கெதிராக நடைபெறும் இன அழிப்புபற்றி சர்வதேச நாடுகளுக்குக் குறிப்பாக உதவிவழங்கும் நாடுகளுக்கு தெரியப்படுத்துவது அவசியம்.

இதனை விரைவாகச் செயற்படுத்துவதன் மூலம் ஈழத்தமிழ்க் கைதிகளின் படுகொலைகள், பொருளாதாரத்தடை போன்றவற்றை சர்வதேசத்திற்கு வெளிக்காட்டி இலங்கை அரசு தமிழர்களைசொந்த நாட்டிலேயே இரண்டாந் தரப் பிரஜைகளாக நடத்துவதை தெரியப்படுத்த முடியும்.

# சீரான உணவுப் பழக்கத்தை பின்பற்றுதல் மூலம் 'அல்சர்' நோயிலிருந்து விடுபடலாம்

## மருத்துவ அறிக்கைகள் கூறும் விளக்கம்

### மருத்துவ விளக்கம்

நாம் சாப்பிட்ட உணவானது இரைப்பையில் நுழைந்து ஜீரணமாகி, அதுவெளியே தள்ளப்படுகிறது. இது இயற்கையாக நடைபெற வேண்டும். தேவையற்றவை பெருங்குடல்மூலம்வெளியாகின்றன. இது முறையாக நடைபெற வேண்டும். இதற்குக் கிரகிக்கும் சக்தி குன்றி விட்டால் குணப்படுத்த முடியாது. இதை யோகசிகிச்சை மூலமே குணமாக்கலாம்.

நீண்ட நாளைய மலச்சிக்கல் வயிற்றுவலியை உண்டாக்கும். தினமும் மலத்தை வெளியேற்றாவிட்டால், அது இறுகி மலச்சிக்கல் உண்டாகிறது. மேலும் இதனால் வயிற்று வலியும் ஏற்படுகிறது. வயிற்று வலியென்ற நோயைத் தீர்க்க மூன்று முறைகளைக் கையாளலாம்.

அ. புண்ணால் வலி ஏற்பட்டால் தனி மருத்துவம்.
ஆ. வாயுவால் வலி ஏற்பட்டால் தனி மருத்துவம்.
இ. உட்கருவிகள் (உறுப்புகள்) வீக்கமடைந்தால் தனி வைத்தியம் எனச் சிகிச்சை அளிக்கலாம்.

யோகப் பயிற்சி மட்டும் இதனைப் போக்காது. உணவு முறைப் பழக்க வழக்கங்கள், நியம வாழ்க்கை இவற்றையும் கடைப்பிடிக்கவேண்டும். பிரமச்சரிய விரதத்தை ஏற்க வேண்டும்.

வயிற்றுப் புண் உண்டானால் சிகிச்சை சற்றுக் கடினமானதாகும். குடற்புண் எனத்தீர்மானித்தால், உடன் கெட்டியான உணவுகளை நிறுத்தித் திரவ நிலையில் உணவை உட்கொள்ள வேண்டும். இது எளிதில் ஜீரணமடைய ஏதுவாக இருக்கும். மிளகாய், கடுகு, மிளகு மூன்றையும் அறவே நீக்க வேண்டும். காரமான உணவுகளை உட்கொள்ளக் கூடாது.

இதனை யோக சிகிச்சை மூலம் நீக்கலாமெனினும், குடற்புண் நீங்கும்வரை சதை கசக்குதலை உடைய ஆசனங்களைச் செய்யக்கூடாது. முதலில் சவாசனம் செய்தல் வேண்டும். அதனைச் செய்யும் போது 'என் வயிற்றுப் புண் நல்ல நிலையில் ஆறிவிட்டது. உடலின் சக்தி அதிகரித்திருக்கின்றது. நரம்புகள் வீரியம் அடைந்துவிட்டன. உடலில் சாந்தியைஏவி உள்ளேன்' என்ற வாசகங்களை மனதில் நினைத்துச் செய்யவேண்டும் பிறகுநாடி சுத்தி பத்து நிமிடங்கள்செய்ய வேண்டும். பிறகு விபரீத கரணி ஆசனம் செய்து மீண்டும் சவாசனம் செய்யவேண்டும்.

இரண்டாம்படி - விபரீதக் கரணி, சர்வாங்காசனம், சவாசனம் நாடி சுத்தி செய்தல்.

மூன்றாம் படி:- அர்த்த பஸ்சிமோத்தாசனம், அர்த்த ஹலாசனம் இவற்றைச் செய்யவேண்டும்.

நான்காம்படி:- விபரீத கரணி, அர்த்த ஹலாசனம், சிரசாசனம், சலபாசனம் ஆகியவை செய்யவேண்டும்.

ஆசனங்கள் முறையுடன் விறைப்பின்றி, மிருதுவாகச் செய்யப்படவேண்டும்.

**உணவு முறை**

குடற் புண்ணுக்கு புழுங்கலரிசிக் கஞ்சி, ராகிக் கூழ், பாசிப்பயறு ஆகியவற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

நோய் தீரும்வரை பிரமச்சரியம் அனுஷ்டிக்க வேண்டும்.

பேதி மருந்து சாப்பிடக் கூடாது விற்றமின் சீ. ஆரஞ்சு, சாத்துக்குடி பழத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்.

சோர்வைப் போக்கிப் புத்துணர்ச்சிதரும் சத்துணவினை உட்கொள்ளவேண்டும். வயிற்றில் வாயு. வலி. குடற்புண் ஆகியவைகளுக்கு மூலகாரணமான உணவினை நெறியுடன் பார்த்துக் கொண்டால் நோயே நம்மை அணுகாது.

நன்றி
இயற்கை வைத்தியமும், யோக சிகிச்சையும்

# மாணவரின் சுயஆற்றலை மேம்படுத்தும் யாழ். தொழில் நுட்பக் கல்லூரி கற்கை நெறி

**இன்றைய கல்வி முறையானது அறிவியலிற்கான கல்வி என்றஇலக்கிலிருந்து நகர்ந்து சான்றிதழிற்கான கல்வியென்றபோக்கில்செல்வதுகுறித்துகல்வியாளர்கள் பலரும் கவலை வெளியிட்டு வருகின்றனர். இந்நிலையில் மாணவரின் அறிவியல் வளர்ச்சி கருதியும், அவர்களின் எதிர்காலக் கற்கைநெறியை மேம்படுத்தும் வகையில் ''யாழ். தொழில்நுட்பக் கல்லூரிக் கற்கை நெறிகள் பற்றியும் அவற்றின் பலாபலன்கள்'' குறித்து விளக்குமுகமாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

**(ஆ-ர்)**

தொகுப்பு
**வே.ஜீவரூபன்**
இடைவரவு விரிவுரையாளர்
(யாழ். தொழில் நுட்பக் கல்லூரி)

இன்றைய கல்வி முறையானது அறிவிற்கான கல்வி என்ற இலக்கிலிருந்து வழிமாறி சான்றிதழுக்கான கல்வி என்ற திசையில்நகருவதனைக் காண முடிகிறதுஅதாவதுகா. பொ.த. (சா/த) மாணவன் வேலை வாய்ப்பில் போட்டி நிலை ஏற்படும்போது தான் க.பொ.த (உ/த) கற்பதன் மூலம் வேலை வாய்ப்பு பெறலாம்என எதிர்பார்க்கின்றான் அங்கு போட்டி ஏற்படின் பட்டதாரி கற்கைக்கும் பின் அங்கிருந்து பட்ட மேற்படிப்பிற்கும் தூண்டப்படுகின்றான். எனவே இந்நிலைக்கான பிரதான காரணம் வேலைவாய்ப்பின்மையே ஆகும்

மேலும் எமது சமூக எண்ணங்கள் வரட்டு கௌரவங்கள் வர்த்தக ரீதியில் கல்வி பற்றிய விளம்பரங்களால் ஈர்க்கப்படும் நிலை, வெளிநாட்டு மோகம் பாடசாலைகளின்றும் பெற்றோர்களினதும் வழிப்படுத்தலின்மை என்பவற்றால் மாணவர்கள் 2ஆம், 3ஆம் நிலை கல்வி பற்றிய தீர்க்க தரிசனமான முடிவை எடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இந்நிலையில் இருந்து மீள்வதற்கு நாம் பின்வரும் நடைமுறைகளை கருத்தில் கொள்வது சிறந்ததாகும்.

பிள்ளைகளை சிறுவயதிலிருந்து புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த. (சதா) பலவிசேட சித்திகள்என்பதில் மட்டும் கவனம் செலுத்தாது அவர்களின் எதிர்கால உயர் கல்வி நோக்கத்திற்கான பாடங்களில் விசேட கவனம் செலுத்த செய்தல் அவசியமாகும்.

எனினும் தொழில் நுட்பக் கல்லூரியின்கற்கைநெறிகளில் பெரும்பாலானவை தொழில் பயிற்சியுடன் கூடிய சான்றிதழ் தகமையை வழங்குவதனால் அதனை பயில்வதன் மூலம் ஒரு சுயதொழில் முயற்சியாளனாக தனது சொந்தக் காலில் நிற்க முடிவதுடன் வங்கிகளின்மூலம் சுயதொழில் முயற்சிக்கான கடன்களை பெறுவதற்கான தகுதி நிலையையும் வழங்குகின்றது.

இவைமட்டுமன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பினை பொறுத்த வரையில் ஒரு கௌரவமான தொழிலினை செய்வதற்கு இத் தொழில் நுட்பக் கற்கை சான்றிதழ்கள் பெரும் பங்கு வகிப்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

உள்ளூர் முயற்சியாளர்கள் கூட தமது முயற்சியாளர்களுக்கு பொருத்தமான தொழில் நுட்பக் கல்வியை பெற்ற ஒருவரை வேலைக்கு அமர்த்துவதனால் அவரது நிறுவனம் கோட்பாட்டு அறிவினையும் செய் முறை அறிவினையும் உடைய ஒரு ஆற்றல் மிக்க மனிதவளத்தை பெற்றுக் கொள்கின்றது.

பெற்றோரின் விருப்பங்களுக்கேற்ற பிள்ளைகளின் பாடத்தெரிவுகள் அமையாது மாணவரின் விருப்பிற்கு ஏற்ப பாடங்கள் தெரிவு செய்வதுடன் சுய தொழில் முயற்சிக்கு அமைவாக பாடங்களை தெரிவு செய்தல் அவசியமாகும்.

மேலும் உயர்தர வகுப்பிற்கான கற்கைப்பிரிவை தெரிவு செய்யும் போது சமூகத்தின் பகட்டான பார்வை, அதிவிசேட சித்திகளின் எண்ணிக்கை என்பவற்றை மட்டும் கவனத்தில் கொள்ளாது குறித்த மாணவனது துறை சார்ந்த விருப்பு, ஈடுபாடு, நுண்ணறிவு, மனைத்திறன், விமர்சிப்பு ஆற்றல், எழுத்தாற்றல் என்பவற்றை கொள்வாது அவசியம்.

வெட்டுப்புள்ளிகளின் போக்கு, ஏனைய மூன்றாம் நிலை கல்வி வசதிகள், தொழில் வாய்ப்பு என்பவற்றையும்கவனத்தில்கொள்ளல் அவசியம்.

எந்த ஒரு கற்கை நெறியை தெரிவு செய்யும் போதும் அது தொடர்பான வர்த்தக ரீதியான விளம்பரங்களை மட்டும் கருத்தில் கொள்ளாது அக் கற்கை நெறியின் பாடவிதானங்கள், பரீட்சிக்கும் நிறுவனம், பரீட்சை முறைகள், மேற்படிப்பு வசதிகள் மேற் கல்வி வசதிக்காக கிடைக்கும் விலக்குகள், (ExcIPtIons) எதிர்கால தொழில் வாய்ப்புகள், பதவி உயர்வுகள் போன்றவற்றை கருத்தில் கொள்வதுடன், கற்கை நெறிபற்றிய அனுபவம் வாய்ந்தோரின் ஆலோசனை பெறுதலும் அவசியமாகும்.

**தொழில்நுட்ப கல்லூரி**

அண்மைக்காலத்தில் தொடரும் யுத்த அவலத்தின் விளைவாக வடபகுதியில் தொழில் நுட்பக் கல்வியின் தரம் வீழ்ச்சியடைந்து வருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை, பரந்தன் இரசாயன தொழிற்சாலை, மற்றும் பிரசித்திபெற்ற பலதனியார் தொழிற்சாலைகள், பாரிய வர்த்தக நிறுவனங்களின் வீழ்ச்சி தொழில் நுட்ப சார்ந்த மாணவரின்நேரடித்தொழில்வாய்ப்பையும் பயிற்சிக்கானசந்தர்ப்பத்தையும் இல்லாது ஒழித்துவிட்டது என்றே கூறவேண்டியுள்ளது.

மேலும் தற்பொழுதுஉள்ள வர்த்தகஸ்தாபனங்கள் கூட குடும்பத் தொழில் மூலமான தொழில்வாய்ப்புக்களாக அல்லது அறிந்தவர்கள் தெரிந்தவர்களது விதந்துரைகள்மூலமான தொழில் வாய்ப்புகளை வழங்குவையாக காணப்படுகின்றனவே ஒழிய ஒரு பொது விளம்பரம் ஊடாக தொழில் தகுதிகாண தராதரங்களை கவனத்தில் கொண்டு ஆட்சேர்க்கும் நிலையில் காணப்படுவதில்லை.

இதற்கான காரணம் இன்றைய தொழில் முயற்சியாளர்களில் பெரும் பங்கினருக்கு ஒரு முயற்சியை முறையான வகையில் கட்டமைத்து அதற்கு தேவையான தகுதி விதிகள் கொண்ட ஆளணியை தெரிவு செய்து நியமிப்பதில் உள்ள அறிவு அனுபவம் என்பன போதாமையே ஆகும்.

இதனாலேயே இன்று தனியார் முயற்சிகள் உருவாகும் வேகத்தில் மூடுவிழா காணுவதை நாம் அவதானிக்க முடிகிறது. (தொடரும்)

# மின்னல் தாக்கியதில் இரு பெண்கள் பலி

(கொழும்பு)

மின்னலால் தாக்குண்ட பெண்கள் மரணமான சம்பவம் தென்பகுதியில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

குளிக்கச் சென்றபோதே இவ் இருவரும் மின்னலால் தாக்குண்டதாகவும் பின்னர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விஜகம, சபுகஸ்கந்த ஆகிய பகுதிகளிலேயே இவ்அனர்த்தம் இடம்பெற்றது.

(க-5)

# பண்டாரவளைப் படுகொலையின் சூத்திரதாரிகள் எங்கே போயினர்

## மனித உரிமை விருத்தி நிலையம் கேள்வி

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலைக்கு காரணமான சூத்திரதாரிகளை இதுவரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடிக்காமல் இருப்பது எமக்குப் பெரும் வியப்பை அளிக்கிறது.

இவ்வாறு மனித உரிமைகள் விருத்திநிலையப் பணிப்பாளர் செல்மன் பெர்ணன்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

பிந்துனுவெவ படுகொலைக்கு காரணமானவர்களைக் கண்டு பிடிக்கவென அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்வது உண்மையில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவல்ல சர்வதேச சமூகத்துக்கு உண்மையை மறைப்பதற்காகவே இந்நடவடிக்கையில் ஈடுபடுகிறது. என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி படுகொலைச் சம்பவம் பற்றிய சண்டனச் செய்திகளை வெளியிடாத ஊடகங்களும் கண்டனங்களுக்குரியவை என்று அவ்வமைப்பு தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்

(ந-2)

## ரூபவாஹினிக்கு எதிராக ஐ.தே.கட்சி எம்.பி வழக்கு

ரூபவாஹினிக்கெதிராக வழக்கொன்றை ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பு மாவட்ட எம்.பி ரவி கருணநாயக்கா தொடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

1998ம் ஆண்டு ரூபவாஹினியில் ஒளிபரப்பான செய்தியின் மூலம் தனக்கு அவதூறு ஏற்பட்டுள்ளதாகவும் இதற்கு 500 மில்லியன் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரி கொழும்பு உயர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு மார்ச் மாதம் 30ம் திகதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

(வ)

## நாசகார தடுப்புப் பிரிவின் விசாரணையில் லோகநாதன்

(ஏறாவூர்)

சூட்டுக் கொலைசெய்யப்பட்ட மட்டக்களப்புமாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினரான நிலலநாயகம் சௌந்தரநாயகத்துடன் மோட்டார் சைக்கிளில் சென்ற அவரது ஆதரவாளரான செல்லத்தம்பி லோகநாதன் மேலதிக விசாரணைக்காக மட்டக்களப்பு நாசகார தடுப்புப் பிரிவினரால் நேற்று மாலைமுதல் தடுத்துவைககப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுக்கிலக்காகி காலில் காயமடைந்த லோகநாதன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குணமடைந்தலோகநாதன் வைத்தியசாலையை விட்டு நேற்று வெளியேறியபோது மட்டக்களப்பு நாசகாரப் பொலிஸ் பிரிவினர் விசாரணைக்காக அவரை அழைத்துச் சென்றனர்.

சௌந்தரநாயகத்தின் படுகொலை சம்பந்தமாக நேரடியான சாட்சியாக அவர் இருப்பதால் கொலைபற்றிய உண்மைத் தகவல்கள் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(வ)

---

### எதிர்த்து ..

விக்கிரமசிங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் யாழ் மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றம் சென்ற ஒரே ஒரு தமிழ் எம்.பியான தி. மகேஸ்வரன், தான பாராளுமன்றம் சென்றால் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிப்பேன் என்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிவந்தார் என்பதும் அவர் பாராளுமன்றத்தில் அவ்வாறு அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து வாக்களிக்காது இருந்துள்ளமை தமிழ் அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

---

### இம்மாத...

மேற்கொண்டுள்ளார்.

இம்மன நிவாரணத்தை வழங்குதில் ஏற்பட்ட காலதாமதத்தை அடுத்து யாழ் மேலதிக அரச அதிபர் ப.நோ.கூ சங்க பொது முகாமையாளர்கள், பிரதேச செயலர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோரை நேற்று யாழ் செயலகத்திற்கு அழைத்து

## 11 இலட்சம் கொள்ளை

[கொழும்பு]

நீர் கொழும்புப் பகுதியில் நேற்று முன்தினம்இரவு வர்த்தகர் ஒருவரிடமிருந்து இனம் தெரியாத நபர்களினால் 11 லட்சத்து பத்தாயிரம் ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பான விசாரணைகளைநீர் கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் எட்டுப்பேரை கைது செய்துள்ளதாக கொழும்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ந-5)

## விசேட அ.அட்டைக்கு மலையகத்தில் எதிர்ப்பு

(பண்டாரவளை)

மலையகத் தமிழ்மக்களுக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதுதொடர்பாக மலையக மக்கள் மத்தியில் அதிருப்தி நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விசேட அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது ஏற்கனவே வழங்கப்பட்ட அடையாள அட்டைகள் இன்னமும் வழங்கப்படாத நிலையில் விசேட அடையாள அட்டைகளை வழங்குவதுஎன்பது மக்களைப் பல கஷ்டங்களுக்குள்ளாக்கும்.

அமைச்சர் டி.எம்.ஜெயரத்தினவின் விசேட அடையாள அட்டை வழங்கும்நடைமுறையை ஆட்சேபித்து மலையக தொழிற்சங்கங்கள் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### படைத்தரப்பில் நால்வர் காயம்

(ஏறாவூர்)

வாழைச்சேனை துறைமுக முகாமிலிருந்து ரோந்து நடவடிக்கைக்காகச் சென்றிருந்த படையினர் மீது நேற்று முன்தினம் புலிகள் மறைந்திருந்து நடாத்திய தாக்குதலில் இராணுவத் தரப்பில் நான்கு பேர் காயமடைந்து சிகிச்சைக்காக பொலனறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாமாங்கம் பொலிஸ் காவலரண்மீது புலிகள் குண்டுத்தாக்குதலையும் நடத்தியுள்ளனர்.

(108)

---

### நோர்வேயின் ..

## அரசுக்கு எதிராக உரிமை மீறல்வழக்கு

(வவுனியா)

வேலைக்குச் சென்று கொண்டிருந்த போது எது வித காரணமும் கூறாது என்னைக் கைது செய்து, மனிதாபிமானமற்ற வகையில் சித்திரவதை செய்தமைக்கு அரசாங்கம் நட்டஈடாக இரண்டு லட்சம்ரூபா தரவேண்டும். இவ்வாறு வவுனியா பூந்தோட்டத்தைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் கண்ணன் அடிப்படை உரிமை மீறல் வழக்க தாக்கல் செய்துள்ளார்.

அரசாங்கத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கில் வவுனியா படைத்தள சாஜன், பொலிஸ் பொறுப்பதிகாரி, சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர் இராணுவத்தளபதி ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி பிரஸ்தாப நபர் களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளபோதும் வழக்குத்தாக்கல் செய்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

(ந-2)

## இரு சடலங்களில் ஒன்று அடையாளம்காணப்பட்டது

(ஏறாவூர்)

அக்கரைப்பற்று வைத்தியசாலையில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்ட இரண்டு சடலங்களில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருக்கோவில் சின்னத் தோட்டம் என்ற இடத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 23 வயதுடைய திருமால் பரமேஸ்வரன் என்று அவரது இளம் மனைவி வனிதராணி (20 வயது) அக்கரைப்பற்று நீதவான் கே.தட்சணாமூர்த்தி முன்னிலையில் அடையாளம் காட்டியுள்ளார்.

மரண விசாரணையின் பின்னர் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தமற்றொரு சடலம் அடையாளம் காணப்படாததினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் புலிகளிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(வ)

### பயிற்சிப் பாசறை

யாழ். தேசிய கல்வியயிற் கல்லூரியின் ஆசிரிய மாணவர்களுக்கான சாரணர் பயிற்சிப் பாசறை எதிர்வரும் 17ஆம், 18ஆம், 19ஆம் திகதிகளில் இராமநாதன் கல்லூரி மைதானத்தில் இரவு-பகல் நிகழ்வாகநடைபெறவுள்ளது இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆணையாளர் சௌந்தரராஜாவும் பீடாதிபதியும் இணைந்து மேற்கொண்டுள்ளனர்.

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கே முதன்முதல் சாரணர் பாசறை நிகழ்வு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

(செ-106)

## 7 சந்தேகநபர்கள்விடுதலை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள்என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஏழு சந்தேக நபர்கள் சட்டமா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைய யாழ். நீதிமன்றம் விடுவித்துள்ளது.

விடுவிக்கப்பட்டோர் விபரம் வருமாறு;

நகுலேஸ்வரி வீரபத்திரன் வீரபத்திரன் றபிகா, வீரபத்திரன் சுகிர்தா, (அல்வாய் தெற்கு அல்வாய்) சண்முகநாதன் ஜெகந்தன் (4ம் வட்டாரம்நயினாதீவு) கந்தையா சச்சிதானந்தசிவம் (கரவெட்டி கிழக்கு கரவெட்டி) சுப்பிரமணியம் வரதராசா (மூளாய் தெற்கு, மூளாய்) கனகலிங்கம் அஜந்தன் (கல்வியங்காடு).

(வ-13)

## இளைஞன் சடலமாகமீட்பு

டாரங்களில் பரபரப்பாகப் பேசப்பட்டத கத் தெரிவிக்கப்படுகிறது. (ம)

### ...யாதுரான...

ரகத்தில் தூதரக அதிகாரி ஹச்சிலிங்ஸை தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இரா. சம்பந்தன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் யோசப் பரராஜசிங்கம் ஆகியோர் அங்கிய தூதுக் குழுவினர் சந்தித்து பேச்சு நடத்தினர்.

வடக்குக் கிழக்கின் தற்போதைய நிலைவரம், அரசாங்கம் யுத்தம் தொடர்பாக கொண்டுள்ள நிலைப்பாடு ஆகியன தொடர்பான விடயங்களை தூதுக்குழுவிடம் கேட்டறிந்த அமெரிக்கத் தூதுவர் இலங்கையின் சமாதானச்சூழல் ஏற்படுவதையே சர்வதேச சமூகம் விரும்புகிறது என்று தெரிவித்தார்.

இதே வேளை நோர்வே அரசின சமாதான முயற்சிகள் வெற்றியடைய அனைத்து நாடுகளும்பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் யுத்தத்தின் மூலம் பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாதென்றும் இச் சந்திப்பின் போது தூதுக்குழு அமெரிக்கத் தூதருக்கு எடுத்து விளக்கியது. (ந-2)

ஆகியோரை நேற்று யாழ் செயலகத்திற்கு அழைத்து நிவாரண விநியோகம் சம்மந்தமாக மாநாடு ஒன்றை நடத்தினார்.

இம் மாநாட்டின் போது தற்போது சங்கங்களில் இருக்கும் நிவாரணப் பொருட்களுடன் தேவையான பொருட்களை கொக்குவிலில் உள்ள களஞ்சியத்தில் இன்று பெற்று விநியோகிக்குமாறு சங்கப் பொது முகாமையாளர்களை பேலதிக அரச அதிபர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் சி.வி.கே சிவஞானம் தனது சங்கம் நேற்று முதல் நிவாரணம் வழங்கும் பணிகளை தொடங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

இம் மாத நிவாரணப் பொருட்களை காலதாமதமின்றி வழங்குமாறு கொழும்பில் உள்ள அரச அதிபர் க.சண்முகநாதனுடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அ. இ. தமிழ்க் காங்கிரஸின் யாழ். மாவட்ட எம்.பி அ. விநாயகமூர்த்தி ஆகியோர் தொடர்பு கொண்டதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். (வ-77-12)

### நோர்வேயின் ..

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் சமாதானப்பேச்சில் ஈடுபட்டிருக்கும் நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹைம் உடனடியாகச் சமாதானப் பேச்சு வார்த்தையை நிறுத்த வேண்டும், அத்துடன் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைக்காக நோர்வேத்தூதுவர் இலங்கை வரும் போது அவரைக் கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்

இப்பத்திரிகையாளர் மாநாட்டில், திலக் கருணரட்ணாவிடம் கட்சியின் அமைப்பாளர் சம்பக்க ரணவக்கவும் கலந்துகொண்டார்.

இதேவேளை நோர்வே புலிகளின் ஆதரவான நாடு என்றும், உள்நாட்டுப் பிரச்சினையில் நோர்வேயின் தலையீடு தேவையில்லை என்றும், சமாதானப் பேச்சுவார்த்தையை நோர்வே கைவிட வேண்டுமென்றும், இச் சமாதான முயற்சி தொடருமானால் வீண்விளைவுகளைச் சந்திக்க வேண்டிவருமென்றும், மக்கள் விடுதலை முன்னணியும் (ஜே. வி. பி.) எச்சரிக்கை விடுத்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

# இளைஞன் சடலமாகமீட்பு

(கொழும்பு)

தந்தையுடன் நித்திரை செய்த தனயன் அடுத் நாட் காலை குழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அக்கரைப்பற்று பகுதியில் கடந்த 10 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

இரவு தந்தையாருடன் படுத்துறங்கிய மகனை விடிகாலை எழுந்து பார்த்த போது காணப்படாததால் தேடிப்பார்த்த வேளை வீட்டிற்கருகில் குழி தோண்டிய அடையாளம் காணப்பட்டதுடன் அதனை நாய்கள் மோப்பமிட்டபடி நின்றன. இதனால் சந்தேகம் கொண்ட தந்தை பொலிஸாரின் உதவியை நாடினார்.

ஸ்தலத்துக்குஉடன்விரைந்த பொலிஸார் குழியிலிருந்து சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் இளைஞனின் சடலத்தை மீட்டெடுத்தனர்.

இராசதுரை கோபால கிருஷ்ணன் (வயது 23) என்ற இளைஞனே கொல்லப்பட்டவராவார். இவர் விடுதலைப்புலிகளின் உறுப்பினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த பின் விடுதலையானவர் என்பதுகுறிப்பிடத்தக்கது. (உ)

### நோர்வேயின்முயற் ...

வரவேற்கக் கூடியதொன்றாகும்என்றுபொது ஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும் விவசாய அமைச்சருமான டி.எம்.ஜெயரத்தினா தெரிவித்துள்ளார்.

அமைச்சர் டி.எம் ஜெயரத்தினா மேலும் தெரிவிக்கையில் இலங்கையின் இனப்பிரச்சினையை சமாதானமாகத் தீர்த்துவைக்கும்நோர்வேயின் முயற்சி பாராட்டப்படக்கூடியதொன்றாக இருந்தபோதும் சமாதானப் பேச்சுக்கள்ஒழுங்காக நடைபெறுவதைபுலிகள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (வ)

ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
விஜய், சிம்ரன் நடித்த
ப்ரியமானவளே
10.30மட்டும்
ராம்கி, மீனா, விவேக்
நடிப்பில்
பாலையாத்து
அம்மன்
[கி-688] 2.30மட்டும்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 14ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.